அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :109/2017

தேதி : 04/10/2017

## டெங்கு காய்ச்சல் நோய் - மருத்துவ நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் நோய் தீவிரமடைந்து உயிரிழப்புகளும், உடல்நலப் பாதிப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. காவலர், கல்லூரி மாணவி, கைக்குழந்தை என நேற்று ஒரே நாளில் மட்டும் 8 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்த சம்பவங்கள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளன.

10000க்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரும், சுகாதாரத் துறை செயலாளரும் தெரிவிருப்பது அதிர்ச்சியாக இருக்கிறது.

நோயின் தாக்கம் ஒருபுறம் வருத்தமளிப்பதாக இருக்கும் அதே வேளை, மருத்துவமனைகளில் மருத்துவர்கள் தட்டுப்பாடு, சில ஊழியர்களின் அலட்சியப்போக்கு என்ற தகவல்கள் வேதனை அளிப்பதாக உள்ளன.

ஏறக்குறைய 8 மாத காலத்திற்கும் மேலாக நீடித்து வரும் டெங்கு காய்ச்சல் நோய், கட்டுக்குள் வராமல் இருப்பது, வேதனை அளிக்கிறது. தற்போது, தமிழகமெங்கும் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், இக்காய்ச்சல் மேலும் பரவக்கூடிய அபாயம் இருக்கிறது.

எனவே போர்க்கால அடிப்படையில் டெங்கு நோயை எதிர்த்துப் போராட வேண்டியது தமிழக அரசுக்கு தலையாய கடமை. புயல், மழை, வெள்ளம் போன்ற பேரிடர் கால மேலாண்மை போன்று தற்சமயம் டெங்கு நோய் ஒழிப்பை தீவிரப்படுத்தியாக வேண்டும்.

உடனடியாக 'மருத்துவ நெருக்கடி நிலை' (Medical Emergency) அறிவிக்கப்பட்டு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆங்காங்கே மருத்துவர்கள், செவிலியர்கள், தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவக்கல்லூரி மாணவர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு, மருத்துவமனைகள் அல்லாது, மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மருத்துவமனைகளில் மருத்துவர்கள் முழு நேரமும் வருகை புரிந்திருக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தேவையான மருந்துகள் தங்கு தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டும். தனியார் மருத்துவமனைகள், தங்கள் வருவாய் நோக்கத்தை மட்டுமே பார்க்காமல், நோயாளிகளின் பொருளாதார நிலைக்கேற்ப இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ சிகிச்சை அளிக்க முன்வர வேண்டும்.

நோய்க்குச் சிகிச்சை என்பது ஒருபுறமிருக்க, நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். ஊர்க்காவல் படை, கல்லூரிகளின் NCC, NSS மாணவர்கள், பொதுமக்கள் அனைத்து ஊராட்சி நிர்வாகத்தோடு சேர்ந்து கொசு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கொசு ஒழிப்பு மருந்துகளை அரசு இலவசமாக வழங்க வேண்டும். டெங்கு உள்ளிட்ட வைரஸ் நோய்களைக் கட்டுக்குள் கொண்டு வருவது ஒருபுறம் என்றாலும், மாநிலம் முழுவதும் அடிப்படை சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டு இனியும் தொற்றுநோய்கள் பரவாமல் இருப்பதையும் மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கையையும் அரசு உறுதி செய்யவேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டு கொள்கிறேன்.

சமத்துவ மக்கள் கட்சி தொண்டர்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் மழைநீர், கழிவுநீர் தேங்கவிடாமல், அது போன்ற இடங்களில் கொசு ஒழிப்பு மருந்துகளைத் தெளித்து சுகாதாரமான சூழ்நிலை உருவாக பொதுமக்களுக்கு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதற்கேற்ப அரசின் நடவடிக்கைகளோடு, பொதுமக்களும் எச்சரிக்கையாக இருந்து, சுற்றுப்புறத் தூய்மைக்கு முக்கியத்துவம் தந்து பாதுகாப்பாக வாழ வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com